www.tamilarangam.net

# ஆவுஸ்திரேலிய முரசு

ஜனவரி – மார்ச்
1993



"உடையவள் சக்தி ஆண்பெண்ணிரண்டும்
ஒருநிகர் செய்துரிமை சமைத்தாள்"
- மகாகவி பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


FOR ALL YOUR NEEDS IN......

SRI LANKAN - INDIAN - MALAYSIAN
SINGAPORIAN & FIJIAN

* SPICES * GROCERIES
* FROZEN FOODS * VIDEO HIRE
* AUDIO TAPES/CDS

VASANTHI SPICES
& MILK BAR

147 HIGH STREET, THOMASTOWN VIC.3074
Tel:464 1857

Trading Hours - Mon to Sat 8.30 a.m. - 8.00 p.m.
Sundays 8.30 a.m. - 6.00 p.m.



For cheapest overall shopping

LANKA LAND SPICES

We have wide range of Sri Lanken. Indian
Groceries and Hot Spices

We have the largest collection of Tamil,
Singhala and Hindi Video Movies for hire

All Sri Lanken Newspapers
(TAMIL, SINGHALA AND ENGLISH)

Kanchipuram - Kashmeer - Cotton
Sarees and Blouse Material
Churithas - Gagara Choli - Guruthas

LANKA LAND SPICES
820 HIGH STREET
THORNBURY 3071, TEL: 416 9548

OPENNING SHORTLY
LANKA LAND TRAVELS
For all your Domestic,International
Travel Arrangements and Air Fares


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இந்த இதழில்.....


எண்ணம்.....
சொன்னார்கள்....
நூற்றாண்டின் சிறந்த நாவல்கள்....
ஒரு பார்வை.... சிட்னி மகாநாடு.
நாடக கருத்தரங்கு
மூன்று பக்கங்கள்.....
சிறுகதை....ஓலங்கள்
கலைவிமர்சனம்.....
– இளந்தென்றல் கலை மன்றத்தின்...'வலை' நாடகம்
– திருமதி உஷந்தினியின்... வருடாந்த நடன நிகழ்ச்சி
நூலகம்....
– எஸ்.பொ. வின் ''நனவிடை தோய்தல்...''
– லண்டன் ''ஈழகேசரி''.....
– மலைநாட்டில் ''குன்றின் குரல்''
பாட்டுக்கு பல ராகம்....
வாசகர் கருத்தும், கடிதங்களும்....


''அவுஸ்திரேலிய முரசில்'' இடம் பெறும் கதைகள், கட்டுரைகள், வாசகர் கருத்துக்கள் முதலானவை எழுத்தாளர்களின் கருத்துக்களே. அவை ''அவுஸ்திரேலிய முரசின்'' கருத்துக்களாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.


கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் கதாசிரியரின் கற்பனையே, படைப்புக்களை திருத்தவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.


ஆசிரியர் : திருமதி. அருண் விஜயராணி
ஓவியர்கள் : நவநீதன், யோகா


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எண்ணம்



வாள் முனைக்கு இல்லாத வலிமை பேனா முனைக்கு உண்டு. இந்தப் பேனாவின் எழுத்துக்களால் மனித மனங்களை நல்ல முறையில் சிந்திக்க வைத்து சரித்திரங்கள் மாற்றி அமைக்கப் பட்டது வரலாறு தரும் உண்மைகள். இந்தப் புனித யாத்திரையைத் தொடங்குபவர்கள் எல்லோரும் இறுதிவரை நின்று நிலைக்க முடிவதில்லை. இதற்கு அவர்கள் மட்டும் அல்ல காரணம். பொருளாதாரப் பற்றாக்குறை...நேரமின்மை...உண்மைகள் மக்களை சென்று அடைய விரும்பாத சிலரின் மன வக்கிரங்கள். இப்படியான சோதனைகளினால் சில சஞ்சிகைகள், பத்திரிகைகள் இரண்டு மூன்றுடன் மனம் உடைந்து தாம் ஏனம் கஷ்டப்பட்டு மக்களை சிந்திக்க வைக்க வேண்டுமா என்ற விரக்தியில் மௌனமாகி விட்டன. அப்படிப்பட்ட சஞ்சிகைகளில் தரமானதாக அமைப்பில், பொருளடக்கத்தில் சிந்தனைகளில் எல்லாவற்றிலும் வித்தியாசமாக வெளிவந்த நான்காவது பரிமாணமும் நின்றுவிட்டது என அறிந்த பொழுது நெஞ்சில் ஓர் வலி. சூட்கேசின் பாரத்தை ஒரு நிமிடம் தூக்கிப் பார்த்துவிட்டுக் கீழே வைப்பவனால் உணர்ந்து கொண்டு விட முடியாது. அதைத் தூக்கிக் கொண்டு நடப்பவனால் தான் புரிந்து கொள்ள முடியும். அதே போல் தான் பத்திரிகைத் தொழிலும். வெளியே நின்று அதன் சிரமம் விளங்காமல் எள்ளி நகையாடுபவர்களைப் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவை இல்லை.
இருண்ட வீட்டிற்கு ஒரு விளக்குப் போதும். எனவே ஆயிரம் பிரதிகளில் நம் சகோதரப் பத்திரிகைகள் கவனம் செலுத் தாது பத்துப் பிரதிகளைக் கொணர்ந்தாலும் அது பத்தாயிரம் பேரை சிந்திக்க வைக்கும் என்ற மனப்பக்குவத்தை அடைய வேண்டும். சிறு துளி பெரு வெள்ளம் அல்லவா!

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாமல் போனபோதும் அச்சடிக்கும் இயந்திரத்தை கைகளினாலும், கால்களினாலும் இயங்க வைத்து ''புல்ஸ்கப்'' தாளில் ''மல்லிகையை கொணர்ந்த''ஜீவாவின்'' தன்னம்பிக்கை நமக்கெல்லாம் வழி காட்டி. ஜீவாவுக்கு லட்சம் பேரை விட லட்சியமான மனிதர்களில் தான் நம்பிகை.

எனவே மலர்ந்துள்ள புத்தாண்டில் அந்தத் தன்னம்பிக்கையை நம் மனதில் புத்தாண்டு தீர்மானமாக கொள்வோமாக.

வாசகர்களுக்கு எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.
அன்புடன்
ஆசிரியர்.

## வருந்துகிறோம்....

எமது சக்தியையும் மீறிய தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த இதழ் சற்று கால் தாழ்த்தியே வெளியாகிறது.

இனிவரும் காலங்களில் 'அவுஸ்திரேலிய முரசு' தாமதமின்றி வெளியாகும் என்ற நம்பிக்கையை அளிக்கின்றோம்.

நம்பிக்கைதானே எமதும் உங்களதும் ஆதாரம்.

— ஆசிரியர் —

ஒரு அவநம்பிக்கைவாதி மேகத்திரளின் கருநிறப் பகுதியையே பார்க்கிறான். ஒரு தத்துவஞானி கருப்பு வெண்மைப் பகுதிகளைப் பார்த்து வியப்படைகிறான். ஆனால் வாழ்க்கையில் நம்பிக்கை உள்ளவனோ மேகத்திரளைப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அதன் மீது நடக்க ஆரம்பித்துவிடுகிறான்.

— எலின்.

www.tamilarangam.net



# ஒரு நூற்றாண்டின்.... பத்து நாவல்கள்.

அந்தனி ஜீவா

நாவல்கள் சமுதாயத்தின் சரித்திரமாகும். சரித்திரத்தில் மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு அவைகளுக்கு அதிகமாகவே இருக்கின்றன. சரித்திரத்தை புதிதாக உருவாக்கும் ஆற்றல் படைத்த மனிதர்களை உருவாக்கும் சக்தியும் அவைகளுக்குண்டு. மனிதனின் சமூக வாழ்வை நாவல்கள் சித்திரிக்கின்றன. சமுதாய மாறுதல்களை நாவலாசிரியர்கள் மிகக் கூர்மையாக அவதானிக்கிறார்கள். அதனால் அவர்களது படைப்புக்கள் காலத்தை கணக்கெடுக்கும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கின்றன.

இலங்கையில் தமிழ் நாவல் துறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்றது. நமது தமிழ் நாவலில் வரலாறு சித்திலெவ்வை மரைக்கார் எழுதிய ''அசன்பே சரித்திரம்'' (1885) என்ற நாவலுடன் வரலாறாக தொடங்கியிருக்கிறது. மிஸர் தேசத்து அரச குமாரரான அசன்பே என்னும் சிறுவனின் கதை சித்தி லெவ்வை தனது புனைக்கதையை ''அஸன் பேயுடைய கதை'' என்ற தலைப்பிலேயே 1885ஆம் ஆண்டில் கொழும்பில் முஸ்லிம் நேசன் அச்சகத்தில் பதிப்பித்துள்ளார். இந்நூல் பின்னர் இந்தியாவில் வெளியிட்டபோது ''அசன்பே சரித்திரம்'' என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கது. தமிழகத்தின் தமிழ் நாவல்துறையின் ஆரம்ப காலத்தில் ''சரித்திரம் என்ற சொற் பிரயோகம் நாவலோடு இணைந்திருந்தமையும், இப்பெயர் மாற்றத்திற்கு காரணமாய் இருந்திருக்கக்கூடும். பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் முதலிய நாவல்களை பின் பற்றி அசன்பேயுடைய சரித்திரத்தை அறிமுகப்படுத்தியிருக்கக்கூடும் எங்கிறார் எஸ்.எம். கமால்தீன் (நூல்: அசன்பே சரித்திரம்).

இலங்கையில் தமிழ் நாவல்கள் வெளிவந்து ஒரு நூற்றாண்டை தாண்டிவிட்டது. ஆரம்ப கால நாவல்களில் அற்புதத் தன்மைகளும் வீரசாகஸ நிகழ்வுகளுமே கருவாக அமைந்தன. முதல் நாவலை தொடர்ந்து ''மோகனாங்கி'' (1895) விஜயசீலம் (1916) ஆகியவற்றில் இப்பண்புகளைக் காணலாம். தமிழகத்திலும் ஆரம்ப காலங்களில் இதே நிலைமைதான் ''ஆங்கிலத்தில் உள்ள ஆற்புத சம்பவக் கதைகளைத்'' தழுவித் தமிழில் எழுந்த கதை நூல்களுடன் வேதநாயகம் பிள்ளை எழுதிய ''பிரதாப முதலியார் சரித்திரம்'', சுகுண சுந்தரி என்பனவும், சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதிய ''மதிவாணன்'' என்பனவும் விசேடமாக இங்கு குறிப்பிடத்தக்கவை. ராஜாமையர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம் திரிகோணமலைச் சரவணப் பிள்ளை எழுதிய மோகனாங்கி என்பதும் ஆங்கிலத்திலுள்ள உலகியற் கதைகளடங்கிய நாவல்களைத் தழுவித் தமிழிலெழுதப்பட்ட நாவல்களாகும். என்கிறார் வி.செல்வநாயகம் (நூல்: தமில் இலக்கிய வரலாறு 1960).

ஆனால், நொறுங்குண்ட இதயம் (1914), சுதந்திரம் செய்த தந்திரம் (1918), நீலகண்டன் (1925), சோமாவதி அல்லது இலங்கை இந்திய நட்பு (1931) ஆகிய நாவல்களில் சமூக உணர்வின் மாற்றத்தைக் காணலாம். இதற்கு முக்கிய காரணம் ''இலங்கையில் ஆங்கிலேயர் வருகையால் நிகழ்ந்த மாறுதல்களுள் முக்கியமானது பழைய நிலமானிய அமைப்பில் ஏற்படத் தொடங்கிய வெடிப்பாகும். புதிய ஆங்கில கல்வியும், பதவிகளும் புதிய மத்தியதர வர்க்கத்தின் தோற்றத்திற்கு வழியமைத்தன. கல்வி முறையின் விரிவும், நாட்டில் எங்கும் ஏற்பட்ட பொது விருத்தியும், சிங்களத் தமிழ் சமூகங்களில் இப் புதிய மத்தியதர வர்க்கத்தை தோற்றுவித்தன. மேலும் வர்த்தகம், கைத்தொழில் என்பனவற்றில் சுதேசிகள் ஈடுபட்டனர். கிறிஸ்தவ மதப் பரம்பலினால் ஓர் அன்னிய கலாச்சாரமும் எம்மிடையே வேரூன்றத் தொடங்கியது. இதனால் புதிய எண்ணங்களும், புதிய சிந்தனைகளும் தோன்றுவதற்குரிய ஒரு சமூக சூழ்நிலை உண்டாயிற்று. என்கிறார், சித்திரலேகா, மௌனகுரு (ஈழத்து நாவல்களின் சமூக உணர்வின் தோற்றம் சிந்தனை தொகுதி 1 தை 1976).

முதல் தமிழ் நாவல் வெளிவந்து அரை நூற்றாண்டுக்குப் பின்னர் நாவல் இலக்கியத் துறையில் மாற்றமும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. ஐம்பதுகளுக்குப் பின்னர் நாவல் இலக்கியத் துறையில் மாற்றமும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. ஐம்பதுகளுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சி காரணமாகவும், இலங்கையில் 'மணிக்கொடி' எனத் திகழ்ந்த 'மறுமலர்ச்சி' சஞ்சிகையின் மறுமலர்ச்சி குழுவினரில் முக்கியமானவராக கருதப்பட்ட அ.செ.முருகானந்தம் எழுதிய ''புகையில் தெரிந்த முகம்'' (1950) கனக செந்திநாதனின் ''விதியின் கை'' ஆகிய நாவல்கள் யாழ்ப்பாண மண்ணின் சிறப்பையும் வ.அ.இராசரத்தினத்தின் ''கொழு கொம்பு'' கிழக்கிலங்கையின் மாண்பையும் எடுத்துக் கூறியது.

www.tamilarangam.net



இதே கால கட்டத்தில் இளங்கீரனின் படைப்புக்கள் ''தென்றலும் புயலும்'' (1955) ''நீதியே நீ கேள்'' (1959) நாவல்கள் சாதி, சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சுட்டிக்காட்டியது.

அறுபதுகளுக்குப் பின்னரே நாவலிலக்கிய துறையில் விடிவெள்ளி முகிழ்ந்தது. ''இழிசன வழக்கு'' என்று பண்டிதர்களால் பரிகாசம் செய்யப்பட்ட பேச்சு வழக்கு மொழியை எழுத்தாளர்கள் கையாண்டனர். ''தேசிய இலக்கியம், மண் வாசனை'' என்ற எண்ணம் வலு வடைந்தது. செ.கணேசலிங்கன் ''நீண்ட பயணம்'' (1965) என்ற நாவலைத் தந்தார். இன்னொரு குறிப்பிட்டுக் கூறவேண்டிய நாவல் எஸ்.பொன்னுத்துரையின் ''சடங்கு'' (1966) ''செ.கணேசலிங்கனின் நாவலை பிரதேச வாரியான மாந்தரின் பாரம்பரியங்களும், அடக்குவோரின் கொடூரங்கள், அடக்கப்படுவோரின் இன்னல்கள், அவர்களது போராட்டங்கள், முன்னேற்றங்கள் என்பன கூறப்படுள்ளன. என குறிப்பிடுகிறார் துரை மனோகரன் (கட்டுரை பிரதேச நாவல்கள் 1976).

எஸ்.பொ. வின் ''சடங்கு'' நாவல் மத்திய தரத்து மக்களின் பிரச்சினைகளை சுட்டிக் காட்டியது. இதே காலத்தில் தான் மலையக தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள், அவர்கள் துயரம் நிறைந்த சோக வாழ்வு நந்தியின் ''மலைக் கொழுந்து'' (1962) கோகிலம் சுப்பையாவின் (1964) ''தூரத்துப் பச்சை'' முதலிய நாவல்கள் மூலம் எடுத்துக்காட்டப்பட்டன. மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வை கருவாகக் கொண்ட முதலாவது நாவல் ''மலைக் கொழுந்து'' அதனையடுத்து வெளிவந்த ''தூரத்துப் பச்சை'' நாவல் தமிழகத்திலிருந்து இந்திய மக்கள் புலம் பெயர்ந்து வந்த குடும்பத்தின் கதை. குடியுரிமையற்ற தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை விவரிக்கின்றது முப்பதுகளில் தமிழகத்து ''மணிக்கொடி'' இதழில் இலங்கை தோட்டத் தொழிலாளர் வாழ்வை புதுமைப்பித்தன் ''துன்பக்கேணி'' என்ற குறு நாவலாக எழுதியுள்ளார். இதனை ஒரு நீண்ட சிறுகதை என்றும் குறிப்பிடுவார்கள். புதுமைப் பித்தனின் படைப்பு வெளிவந்த கால் நூற்றாண்டுகளுக்குப் பின்னரே மலையக மக்களைப் பற்றிய படைப்புகள் தோன்றின. மலையக மக்களின் பிரச்சினைகளைப் பற்றி யதார்த்தபூர்வமாக வர்க்க முரண்பாட்டையும், தொழிற்சங்க முயற்சிகளைப் பற்றியும் எடுத்துச் சொன்ன நாவல் யோ. பெனடிக்ட் பாலனின் ''சொந்தக்காரன்'' (1968).

இதனைத் தொடர்ந்து எழுபதுகளில் நாவல் இலக்கியத் துறையில் நல்ல பல படைப்புக்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் குறிப்பிட்டு சொல்லக்கூடியனவாக பல நாவல்கள் வெளிவந்துள்ளன. சாதி அமைப்புக்களையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் சுட்டிக்காட்டும் கே.டானியலின் ''பஞ்சமர்'' (1972) ஓர் இன உணர்வு கொண்ட தமிழ் இளைஞுமன உணர்வுகளையும், மனோ வளர்ச்சியையும் காட்டும் அருள் சுப்பிரமணியத்தின் ''அவர்களுக்கு வயது வந்துவிட்டது'' (1973) ஒரு பிரதேசத்தின் சடங்கு, சம்பிரதாயங்களை கூறும் அ.பாலமனோகரனின் ''நிலக் கிளி'' நகரமயமாக்கப்பட்ட வாழ்க்கைமுறையின் சிதைவுகளும் கிராமங்களின் நிலைமையை சுட்டிக்காட்டும் ''காட்டாறு' (1987). தோட்டங்கள் தேசிய மயம் என்ற போர்வையில் துண்டாடப்படல், மொழி கடந்த காதல் போராட்டங்கள் ஆகியவற்றை மனித நேயத்துடன் எழுதப்பட்ட தி.ஞானசேகரனின் ''குருதி மலை'' தமிழ், சிங்கள, முஸ்லீம் ஊழியர்களின் வாழ்க்கை நிலை, நாளாந்த பிரச்சினைகள், அவர்களிடையே ஏற்பட்டுவரும் அரசியல் விழிப்புணர்வு, போன்றவற்றை எடுத்துச் சொல்லும் சி.சுதந்திரராஜின் ''மழைக் குறி'' 1975.

எண்பதுகளில் வெளிவந்த நாவல்களில் தமிழக விமர்சகர்களாலும் நம்மவர்களாலும் மிகவும் கவனத்துக்குரிய நாவலாக கொள்ளப்பட்டது கே.டானியலின் 'கானல்' ஆகும். இதே நாவலாசிரியரின் 'பஞ்சமர்', 'தண்ணீர்','அடிமைகள்' நாவல்களை விட 'கானல்' நாவலே மிகச்சிறந்தது என்பது பலரது அபிப்பிராயமாகும். ''இந்த கானலிலிருந்து வரும் ஞானமுத்து குருவானவர் என்னுடைய அறிவறிந்த கால எல்லைக்குட்பட்டவர். பெயர் மட்டும் 'ஞானப்பிரகாசர்' என்பதற்கு பதில் ஞானமுத்தராக இருக்கிறார். 'சுப்பர்' அது போல அல்லாமல் சுப்பராக வருகிறார். இவர்கள் இருவருடனும் நான் பேசியிருக்கிறேன், நெருங்கி பழகியிருக்கிறேன் இதைக்கொண்டு எனது வயதுகுட்பட்டவைகளையே சமகாலம் என்று நான் கூறுகிறேன்'' கானலைப்பற்றி படைப்பாளியான கே.டானியல் குறிப்பிடுகிறார். (கானல் - முன்னுரை 1986).

இந்த காலகட்டத்தில் குறிப்பிட்டு சொல்ல கூடிய இன்னொரு நாவல் மலையக மக்கள் கவிமணி என்றழைக்கும் சி.வி. வேலுப்பிள்ளையின் ''இனிப்பட மாட்டேன்'' (1984) இந்த நாவல் 1977 ஆம் ஆண்டுகட்கு பின்னர் மலையகத் தொழிலாளர்கள் அனுபவித்த இன்னல்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது. சிங்களப் பேரினவாதிகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டு தோட்டங்களை விட்டு புகலிடம் தேடுவதா ? என்ற இரட்டை நிலையில் உழன்ற தொழிலாளர்களின் நிலைமையை இந்நாவல் வெளிப்படுத்துகின்றது. அந்நிலையில் எங்கும் தப்பி ஓடுவதில் பயனில்லை என்பதையும் மலையகத்திலேயே உறுதியாக காலூன்றி நிற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் போக்கில் எழுதப்பட்டது'' (கட்டுரை - 1978குப்பின் ஈழத்தின் தமிழ் நாவல் இலக்கியம் - மல்லிகை 1988).

இது போன்று குறிப்பிடக்கூடிய இன்னொரு நாவல் மு.தளையசிங்கத்தின் ''ஒரு தனி வீடு'' (1985) இந்நாவல் நூலுருவம் பெறுவதற்கு கால் நூற்றாண்டுக்கு முன்னர் எழுதப்பட்டது. இலங்கை வட பிரதேசத்து தமிழர் வாழ்க்கையை கருவாகக் கொண்ட நாவல் 1950 - 1960 காலப்பகுதியின் யாழ்ப்பாண பிரதேச

www.tamilarangam.net



புங்குடுதீவு கிராமியக் களத்தில் நிகழும் கதையம்சத்தை கொண்டது. இரண்டு பாகங்களாக அமையும் இந்நாவலில் முதலாம் பாகம் அக்கிராமத்தின் உறவு நிலைகளில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் நிகழும் முரண்பாடுகளை எடுத்துக் காட்டுவது. இரண்டாம் பாகம் பரந்த சமூக நிலையில் தமிழர் சிங்களவர்கள் இடையிலான பிரச்சினைகள் 1958 இன் கொலை என்பவற்றை கூறி அவற்றின் விளைவாக தமிழர் தமக்கென ஒரு அரச கூட்டாட்சியின் கீழ்ப் பெற வேண்டும் அல்லது தனி நாடு பெற வேண்டும் என்ற கருத்தை முன் வைப்பது இது போன்று எண்பதுகளில் பல நாவல்களை காட்டலாம்.

எண்பதுகளில் செங்கை ஆழியானின் 'காட்டாறு' நந்தியின் 'நம்பிக்கை' நாவல்களை குறிப்பிடலாம். இலங்கை எழுத்தாளர்களில் கே.டானியலும், செங்கை ஆழியானும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தங்கள் நாவல்களில் இடம் பெறும் மனிதர்கள் பற்றிய சமூக ஆய்வு வரலாற்று விபரங்கள் பற்றிய சமூக ஆய்வு ஆகியவற்றை நிறைய தருவதில் தமிழ்நாட்டு முற்போக்கு எழுத்தாளர்களைவிட சிறந்து இருக்கிறார்கள் என ஞாநி குறிப்பிடுகிறார்.

இலங்கையின் தமிழ் நாவலுக்கு நூறு வயது தாண்டிவிட்டது, இந்த நூற்றாண்டை கடந்த நிலையில் சுவைஞருக்கு பத்து நாவல்களை சுட்டிக்காட்டலாம் என என் மனம் விழைகிறது. இந்த நாவல்களும் காலங்கடந்து இலக்கிய வரலாற்றில் பேசப்படும் நாவலாக அமையும்.

செ.கணேசலிங்கனின் ''நீண்ட பயணம்'', எஸ்.பொன்னுத்துரையின் ''சடங்கு'' சி.சுதந்திரராஜின் ''மழைக்குறி'' செங்கையாழியானின் ''காட்டாறு'', ஈ110 சேகரனின் ''குருதிமலை'', அருள் சுப்பிரமணியத்தின் ''அவர்களுக்கு வயது வந்து விட்டது'' சி.வி.வேலுப்பிள்ளையின் ''இனிப்படமாட்டேன்'' மு.தளையசிங்கத்தின் ''ஒரு தனி வீடு'' நந்தியின் ''நம்பிக்கை'' கே.டானியலின் ''கானல்''.

இந்த பத்து நாவல்களும் ஏதோ ஒரு விதத்தில் தனித்துவமிக்கதாக திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

நன்றி ''தடம்'' - 1992

*CASH... Cash...*

*Cash என்ற ஆங்கிலப் பதம் எந்த மொழியிலிருந்து வந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா ? அது தமிழில் இருந்து தான்.*

*- ஆதாரம்*
*'என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா'*

# கலை விமர்சனம்

திருமதி உஷாந்தினி ஸ்ரீ பத்மநாதனின்
## வருடாந்த நடன நிகழ்ச்சி.

குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சி ஆரம்பமாதல்..... சுருக்கமான நன்றியுரை........ பேச அழைப்பவர்களைக் கூட அளவோடு பேச வைக்கும் கெட்டித்தனம்...... கண்ணுக்கு அழகான பொருத்தமான உடை அலங்காரங்கள்........ பார்வையாளர்கள் அதனை இம்முறையும் அனுபவிக்க கொடுத்து வைத்தவர்கள்

ஆனால் நடந்தது முழுக்க முழுக்க பரத நாட்டியமா என்றால் இல்லை என்று தான் சொல்லத் தோன்றுகிறது. முத் தேவிகளைக் கொண்ட சக்தி நடனம் சிறப்பு. குறத்தி நடனத்தில் அளவுக்கு அதிகமான நளினம் மனதை மகிழ்ச்சிப் படுத்தவில்லை. அத்துடன் மட்டும் அல்லமல் புதிய யுக்திகளை, முத்திரைகளை பரீட்சிக்க பரதத்தில் வேறாக நடனங்கள் உண்டு. பரதத்தின் உயிர் நாடிகளான நடனங்களில் அதனை புகுத்த நினைக்கக் கூடாது. அது வரவேற்கத் தக்கதல்ல.

குழந்தைகள் நன்றாக ஆடினார்கள்.ஆயினும் பல நடனங்களில் ஒரே முத்திரைகள் வருவது கொஞ்சம் அலுப்பு. தனது கற்பனைத் திறனைக் காட்ட மாறிமாறி நடனங்களின் பட்டியலை நீட்டாமல் ஓர் இரண்டு நடனங்களில் வித்தியாசமான முத்திரைகளுடன் அமைத்திருக்கலாம்.

மாணவிகளைப் பயிற்றுவிக்கும் போது சிரித்துக் கொண்டே ஆடுங்கள்.. என்று சொல்லியிருக்க வேண்டும் ஆசிரியை. பல இடங்களில் அவர்கள் அளவுக்கதிகமாக சிரிக்கிறார்கள்.

விடா முயற்சியும், நல்ல கற்பனைத் திறனும் கொண்ட ஆசிரியை அடுத்த நிகழ்ச்சிகளில் இக் குறைகளைக் களைய முயல வேண்டும்.

– துளசி –

www.tamilarangam.net


# கலை விமர்சனம்

இளந்தென்றல் கலை மன்றத்தின்...

## ''வலை'' நாடகம்

சரித்திர நாடகங்களை மேடையேற்றுவோர் வழக்கமாக எதிர்நோக்கும் சிரமங்களையே அண்மையில் மெல்போர்னில் அரங்கேறிய ''வலை'' நாடகத்திலும் அவதானிக்க முடிந்தது. நாடகம் – அதனை பார்த்து ரசிக்கும் ரசிகர்களின் சிந்தனையிலேயே பெரிதும் ஊடுறுவுகின்றமையால், சரித்திர நாடகம் என்று வரும்பொழுது அதன் வரலாற்றுப்பின்னணியும் அவசியம் அறியப்பட வேண்டியதாகிவிடுதல் இயல்பு.

சாம்ராட் அசோகனின் வரலாற்றை ஓரளவே நம்மவர்கள் தெரிந்து வைத்திருந்தாலும் அவனை மன்னனாக்குவதில் தனது சாதுர்யத்தையும் தந்திரோபாயத்தையும் கையாண்ட சாணக்கியரின் வரலாறு பெரும்பாலானோருக்குத் தெரியாது. பிரபல எழுத்தாளர் எஸ்.பொ. நீண்ட காலத்துக்கு முன்பு எழுதிய ''வலை'' நாடகத்தை விக்டோரியா இளந்தென்றல் கலைமன்றத்தினர் தமது பொங்கல் விழாவுக்காக தயாரித்து மேடை யேற்றிய சமயம் மேற்சொன்னவைகள் நினைவுக்கு வந்தன. எனினும், ரசிகர்களுக்கு முற்றிலும் அறிமுகம் இல்லாத ஒரு விடயத்தை தம்மாலியன்றவாறு முயற்சித்து அறிமுகப்படுத்த முனைந்திருந்தமை பாராட்டுக்குரியது. சாணக்கியனாக நடித்த பாஸ்கரதாஸ் பாத்திரத்தை நன்கு உணர்ந்து நடித்தார். எனினும் முதலாவது காட்சியில் ''ஒலி'' அவரை சோதித்துதான் விட்டது.

கிருஸ்ணமூர்த்தி (அசோகன்) சுரேஸ் (சுசிமன்) பிரகாஷ் (அஜாத்தசத்ரு) ஜெயரட்ணம் (உபகுப்தர்) செல்வி நளாயினி (காருவசி) முதலானோரும் தமது பங்களிப்பை வழங்கினர். அரசியல் சதுரங்கத்தில் – ராஜதந்திரம் புரியும் நர்த்தனங்களை சித்திரித்துள்ள இந்நாடகத்தின் பின்னணி வரலாற்றை நாடகம் ஆரம்பமாவதற்கு முன்பே ரசிகர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் தெரிவித்திருப்பின் கதை யோட்டத்தை ரசிகர்கள் புரிந்து கொண்டிருப்பர். ஆயினும் நாடக நெறியாளர் திரு.ஸ்ரீஸ்கந்தராஜாவினதும் ஒப்பணையாளர் கலைஞர் கண்ணனின் பணிகளையும் குறைத்து மதிப்பிட முடியாது.

– முகுந்தன் –

அடுத்த இதழில்

## எங்கே போகிறோம் ?....

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்தகுடி என பெருமை பேசும் தமிழ் இனம், இன்று உலகெங்கும் சிதறுண்டு வாழ்கிறது.

ஈழத் தாயகத்தில் மட்டுமல்லாது, சென்றவிடத்திலும் அகதிகளாகியுள்ள தமிழினத்தவர்கள் எங்கே போகிறார்கள்..?

ஆராய்கிறது அடுத்த இதழ் !

# மூன்று பக்கங்கள்

### முதலாம் பக்கம்

''எமது உளவுப்படையின் வேவு நடவடிக்கையின் அடிப்படையில் புதிதாக வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கியே இராணுவத்தளபதி டென்ஸில் கொப்பேகடுவ உட்பட பத்துப்பேர் கொலை செய்யப்பட்டனர்.''

– பி.பி.சி. நிருபரிடம் யோகரத்தினம் யோகி.

### இரண்டாம் பக்கம்

''தீவுப்பகுதிகளை இராணுவம் கைப்பறுவதற்கு முன்பே புலிகளினால் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கியே தளபதி டென்ஸில் கொப்பேகடுவவும் மற்றவர்களும் கொல்லப்பட்டனர்.''

– இலங்கை பாதுகாப்பு அமைச்சு அறிக்கை –

### மூன்றாம் பக்கம்

''இராணுவத் தளபதி உட்பட பத்துபேர் அராலித்துறையில் கொல்லப்பட்ட விவகாரம் மர்மமானது. தளபதியை அழிக்க அரசின் பக்கமே நடவடிக்கை இருந்திருக்க வேண்டும் என்று சந்தேகிக்கிறேன். சர்வதேச மத்தியஸ்தர்கள் கொண்ட குழு இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்கவேண்டும்''.

– திருமதி. டென்ஸில் கொப்பேகடுவ –

www.tamilarangam.net



# ஓலங்கள்




அன்புள்ள அத்தானுக்கு,

உங்களது கடிதம் கிடைத்தது. முகாமிலிருந்து வெளியேறி, வாடகை வீடு தேடியலைந்து ஒருவாறாக ஒரு 'கம்பவுண்டில்' ஒரு அறையை வாடகைக்கு அமர்த்திக் கொள்ள முயன்றதில் ஏற்பட்ட தாமதத்தினால் எனது பதிலும் காலம் தாழ்த்தியே வருகின்றது.

தினமும் கடிதத்திற்காக காத்திருப்பீர்கள். காத்திருத்தலின் கொடுமையை இருவரும் உணர்ந்து கொண்டோம்.

கடந்துவிட்ட ஆறாண்டுகளும் எப்படித்தான் வேகமாக உருண்டோடினவோ தெரியவில்லை. கட்டுனாயக்காவில் உங்களை வழியனுப்ப வந்த நாள் இன்னமும் மனக்கண்களில் ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த நாளை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சு அடைக்கின்றது அத்தான்.

நானும் பிள்ளைகளும் பிரிந்திருக்கிறோம் என்பதே ஆச்சரியமானதுதான். நீங்கள் ஒவ்வொரு கடிதத்திலும் எழுதும் பிரிவுத்துயரத்தை நானும் இங்கு அனுபவித்துக் கொண்டுதானிருக்கிறேன். உங்கள், தாபங்கள் ஏக்கங்கள் புரியாமல் இல்லை. மூத்தவள் 'அப்பா எப்போதம்மா வருவார்' என்று அடிக்கடி கேட்பாள். உங்கள் மகனோ குழப்படி செய்து அடிக்க நேர்ந்தால், 'அப்பாட்ட... போறன்...' என்று முகத்தை நீட்டிக் கொண்டிருப்பான்.

நீங்கள் போய் அடுத்த வருடமே நாமும் உங்களிடம் வந்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் தான் மறுநாள் யாழ்தேவியில் ஊர்போய்ச் சேர்ந்தேன்.

இப்பொழுது அங்கே, யாழ்தேவியும் இல்லை, யாழ் ரயில் நிலையமும் இல்லை, தண்டவாளங்களும் இல்லை. அங்கு இனி எப்பொழுது ரயிலோடுமோ தெரியவில்லை.

கட்டப்பிராய் கிளியக்காவின் புருஷனும் உங்களுக்குப் பிறகுதானே அவுஸ்திரேலியா போனார். அவர் போய் இரண்டாம் வருடமே கிளியக்காவையும், பிள்ளைகளையும் அழைத்து விட்டார்.

நல்லூர் ராமலிங்கம் ரோட்டில் உங்களிடம் 'டியூஷனுக்கு' வந்த ராசனும் உங்களுக்குப் பிறகு தானே புறப்பட்டான். அவனுக்கும் அங்கே சீவிக்க அனுமதி கிடைத்து, திரும்பி வந்து நல்ல சீதனத்துடன் கோவிலடிப் பெட்டையை கலியாணம் செய்து அழைத்துப் போய்விட்டானே.

அந்தப் பிள்ளைக்கும் அங்கு ஒரு குழந்தை பிறந்து விட்டதாக அவவின்ர அம்மா சொன்னா. இப்பொழுது அந்த மனுஷியும் அடுத்த தெருவிலதான் குடியிருக்கிறா. அடிக்கடி சந்திப்போம். அவவுக்கும் மகளிட்ட வார யோசனைதான்.

நீங்கள் எங்களுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை அத்தான். நீங்கள் பக்கத்தில் இல்லாதது தான் பெரியகுறை. கொந்தளித்த கடலில் நாம் வந்த படகு அல்லாடிய பொழுது உயிரை கையில் பிடிச்சுக்கொண்டிருந்தது இப்போது நினைவுக்கு வருகிறது. இப்பொழுது இங்கு நாம் பூனை குட்டி காவுமாற் போன்று இடத்துக்கிடம் மாறி மாறி அவஸ்தைப் படுவதை பார்க்கையில், அன்று அந்தக்கடலிலேயே செத்துப் போயிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

www.tamilarangam.net


''இராமன் இருக்கும் இடம்தான் சீதைக்கு அயோத்தி''. நான் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கு ஆசைப்படவில்லை. நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் அங்கு உங்கள் அருகாமையில் வாழத்தான் ஆசைப்படுகிறேன்.

'அப்படியென்றால், ''போங்கோ..போங்கோ..'' எண்டு என்னையேன் துரத்தினாய்', என்று நீங்கள் கேட்பது புரிகிறது. எமக்கும் இரண்டு பிள்ளைகள். மூத்தவள் என்ர தோளுக்கு வளர்ந்திட்டாள். களைப் போன்று காதலித்து சீதனம் எதிர்பார்க்காமல் கைப்பிடிக்கக் கூடிய மாப்பிள்ளை எங்கட செல்வத்துக்கு கிடைக்கப் போறதில்லை, எண்டபடியால் தான் உங்களையும் அவுஸ்திரேலியாவுக்கு போங்கோ

எண்டு களைச்சனான்.

நாம் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. நம்மை பாதுகாக்க வந்தவர்களாலேயே நமது மண் மேயப்பட்டது. இன்று நாம் மேய்ந்தவர்களின் மண்ணுக்கே அடைக்கலம் தேடி வருமளவுக்கு துர்பாக்கியசாலிகளாகி விட்டோம். வந்த புதிதில் கிட்டிய ஆறுதலும் நிம்மதியும் இப்போதில்லை. எமக்காக கண்ணீர் சிந்திய கண்களில் வெறுப்பே இன்று பொங்கியுள்ளதை அவதானிக்கின்றோம்.

அப்பா முன்பு ஒரு கதை சொல்லுவார். அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையல்ல. புருஷனை கைவிட்டு அயல்வீட்டுக்காரனை நம்பிய கதை. அந்த சுவாரஸ்யமான கதையை எழுத வேண்டும் என்று அடிக்கடி நினைப்பேன். ஆனால் கடிதம் எழுத அமரும்போது மறந்து, எங்கள் அவலக்கதையையே தொடருவேன். இன்றாவது அப்பா சொன்ன கதையை எழுதலாம்.

ஒரு வீட்டில் ஒரு கணவனும், மனைவியும் வாழ்ந்தார்கள். இரண்டுபேருக்குமிடையே அடிக்கடி முரண்பாடுகள். கணவன், மனைவியை அடித்துத் துன்புறுத்தி கொடுமைப்படுத்துவான். மனைவி பொறுத்துப் பொறுத்துப் பார்த்து பொறுக்க முடியாமல் எதிர்க்கத் தொடங்கினாளாம். நிலைமை முற்றி ஒருநாள் கணவன், மனைவியை அடித்துக்களைத்து விட்டான். அவள் பாவம், அயல் வீட்டில் அடைக்கலம் கேட்டு தஞ்சம் புகுந்தாள். அயல் வீட்டுக்காரர்கள் ஆதரித்து, தங்க இடமும், உண்ண உணவும் கொடுத்தார்கள்.

தன் கணவனோடு இனிமேல் சீவிக்க முடியாது பிரிந்து செல்வதுதான் ஒரே வழியென்று அவள் தீர்மானித்தாள். ஆனால் அயல் வீட்டுக்காரர்களோ, ''ஆயிரம்தான் சண்டை சச்சரவுகள் இருந்தாலும் கணவன் மனைவிக்கிடையே இதெல்லாம் சகஜம்தானென்று நினைத்து சமாதானமாகி விடவேண்டும்.'' - என்று அவளுக்கு புத்திமதி சொல்லிப்பார்த்தார்களாம். பாதிக்கப்பட்டவளோ, இனிமேல் அவனுடன் வாழ முடியாது. அதே சமயம் அந்த வீட்டில் தனக்குள்ள பங்கை தனக்குத் தந்தாக வேண்டும் என்று சொன்னாளாம்.

அயல் வீடுக்காரன் மத்தியஸ்தம் பேச வந்தான். வந்ததோடு நிற்கவில்லை. அவளை அவள் வீட்டிலேயே ஒரு அறையில் இருக்கவும் சொல்லி சமரசம் செய்து வைத்தான்.

ஆனால் அவளுக்கோ கணவன் மீண்டும் கொடுமைப்படுத்துவான் என்ற சந்தேகம் இருந்தபடியால் அதே வீட்டில் வேறு ஒரு அறையில் அயல் வீடுக்காரனும் துணைக்கு இருந்தால் கணவன் சிறிதேனும் பயப்படுவான் என்ற எண்ணமும் துளிர் விட்டது.

அயல் வீட்டுக்காரனுக்கும் இவள் மீது நீண்ட காலமாக ஒரு கண் இருந்திருக்கிறது இவள் வீட்டில் நுழைவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தவன் அவன்.

பழம் நழுவி பாலில் விழுந்த கதையாக அயல் வீட்டுக்காரன் அவளின் ஆபத்பாந்தவனாகி விட்டான். அவள் வீட்டின் ஓர் அறையில் குடியிருக்கவும் முடிவு செய்துவிட்டான்.

## அவுஸ்திரேலியாவில் எழுத்தாளர் கவனத்திற்கு.......

அவுஸ்திரேலியாவில் வதியும் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய புதிய தொகுப்பு நூல் வெளியாகவுள்ளது. இத்தொகுப்பில் தமது கதையை இடம்பெறச் செய்ய விரும்பும் எழுத்தாளர்கள், இத்தொகுப்புக்கென புதிய சிறுகதை ஒன்றை எழுதி அனுப்புதல் வேண்டும். ஏற்கனவே பிரசுரமாகாத கதையாயின் பெரிதும் விரும்பத்தக்கது. முகவரி

AUSTRALIAN FEDERATION OF TAMILS
P.O.BOX 486, MOORABIN
VICTORIA 3189.

www.tamilarangam.net



சில நாட்கள் அங்கு அமைதி நிலவியது. ஒரு நாள் அவள் கணவன் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து அயலான் அவளை சீண்டிப் பார்த்திருக்கிறான்.

அவளோ கற்புக்கரசி; விடுவாளா? வெகுண்டு எழுந்தாள். கூக்குரலிட்டாள். கணவனை துணைக்கு அழைத்தாள். அயலானின் பாதுகாப்பும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் அவன் போனால் போதும்'' என்றாள்.

இதனைக் கேட்ட கணவன் சொன்னான், '' அடியேய் "" பார்த்தாயா ""நம்பி மோசம் போக இருந்தாயே "" என்ன இருந்தாலும் நான் உனக்கு தாலி கட்டிய கணவன். அவனோ அயலவன், என்னை நம்பாமல் அவன் துணை நாடியதேன். துணைக்கு வந்தவன் துணிச்சல் பார்த்தாயா? இனிமேலாவது என்னுடன் வாழ வழியைப்பார்

கணவனும் மனைவியும் இணைந்து எழுப்பிய சத்தத்தில் அயல் வீட்டுக்காரன் நழுவி அகன்றான்.

பின்னர் அவளும் சிறிது காலம் கணவனுடன் சந்தோஷமாக இருந்தாள். அவளது ஊழ்வினைப்பயன் சும்மா விடவில்லை. மீண்டும் கணவனின் கொடுமைக்கு ஆளானாள்.

வெகுண்டாள்; திமிறினாள், எதிர்த்தாள், மீண்டும் அயல் வீட்டுக்காரன் ஆதரவை எதிர்பார்த்து ஓடினாள்.

அவ்விதம் வெளியே ஓடினாலும் கணவனையும் நம்ப முடியாமல் அயலவனையும் நம்பாமல் ''கடவுளே ... எனக்கு விடிவில்லையா'' என்று கதறினாளாம்.

அப்பா முன்பு சொன்ன கதையை இப்பொழுது நினைத்துப் பார்க்கிறேன் அத்தான் இக் கதையின் ஆழம் புரிந்திருப்பீர்கள்.

அப்பா, அமைதி காக்க வந்தவங்களால் உரும்பிராயில் சிக்குண்டு செத்துப்போன செய்தி உங்களுக்கும் எங்களுக்கும் பழையதுதான். ஆனால் அப்பா உயிருடன் வாழ்ந்தபோது சொன்ன கதைகள் சாகவில்லை.இன்றும் அவற்றுக்கு உயிருண்டு

மகாபாரதமும், இராமாயணமும் இன்றும் வாழ்வதற்கு அந்தக் காவியங்களில் நடமாடிய பாத்திரங்கள் இன்றைக்கும் சமுதாயத்தில் வாழ்கின்றன நவீன உருவங்களில் என்று அப்பா அடிக்கடி சொல்லுவார்.

அப்பா பண்டாரவளையில் படிப்பிக்கின்ற காலத்தில் அம்மாவுக்கு ஊரில் வீட்டு வேலைக்காக அழைத்து வரப்பட்ட தோட்டத்துப் பெடியன் மாணிக்கம் ஒரு நாள் பயித்தம் உருண்டை எடுத்துச் சாப்பிட்டதுக்கு அம்மா அவனுக்கு அடித்த அடியும் திட்டிய திட்டுகளும் எனக்கு இப்பவும் நினைவில் நிற்கிறது.

''தோட்டக்காட்டுப் பயலே... களவா எடுக்கிறாய்... கள்ளத்தோணி...என்றெல்லாம் அம்மா ஏசினா..

அன்று அம்மா அவனுக்கு ஏசியதும் அடித்ததும் நியாயமாகத்தான் அன்றைய எனது சின்ன அறிவுக்குப் பட்டது.

''நான் கடலையே பார்த்தது இல்லை அக்கா... அம்மா என்னை ஏன் கள்ளத் தோணீ எண்டு சொல்றாங்க...– என்று அவன் அன்று அழுதவேளை கூட அந்த பிஞ்சு உள்ளத்தை நான் புரிந்து கொள்ளவில்லை.

இன்று நாங்கள் கடல் கடந்து ''கள்ளத் தோணிகளில் ஏறிக்கொண்டிருக்கிறோம். அவன் ... மாணிக்கம் கொழும்பில் செட்டியார் தெருவில் ஏதோ ஒரு நகைக்கடையில் வேலை செய்வதாக நீண்ட காலத்தின் பின்பு அறிந்தேன்.

ஊரிலிருந்து அகதிகளாக படுகளில் ஏறியபோது அந்த பிஞ்சு முகம் நினைவுக்கு வந்தது .

நான் விரக்தியில் எழுதுவதாக நீங்கள் நினைக்களாம்.

மனித உணர்வுள்ளவர்களுக்குத் தான் விரக்தி வரும்.

மனித உணர்வே மரத்துப் போன நிலையில் மரணத்தை எந்த சமயமும் எதிர் நோக்கிய எமக்கு விரக்தி என்பது துப்பரவாக இல்லை அத்தான்.

செத்துப்பிழைத்து ஒருவாறு இங்கு வந்து சேர்ந்த புதிதில் படுக்கபாயும் சமைக்க பருப்பும் அரிசியும் கொடுத்தார்கள்.

இப்போது நிலைமை தலை கீழாக மாறி விட்டது. எமக்கு பொருள் பண்டம் தரா விட்டலும் பரவாயில்லை ஆதரவு மிக்க கருணயுள்ளங்களையும் உதவ முன்வருபவர்களையும் இங்கு காண்பது அரிதாகி விட்டது. எம்மீது இரக்கம் கொள்பவர்கள் மீதும் சந்தேகக் கண்கள் பாய்கின்றன. இப்போது எமது நிலைமை தாழ்ந்துதான் போய்விட்டது.

அரசியல் சதுரங்கத்தில் நாம் நகர்த்தும் காய்களாகிவிட்டோம். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிகளுக்குத்தானே கொண்டாடம். இப்போது அரசியல் கூத்தாடிகளின் காட்டில் மழை பொழிகின்றது.

அங்கே கல்வியங்காட்டில் எங்களது நாற்சார் வீடு,வாழை, பனை நின்ற வளவு மாமரமும் முருங்கையும் நின்ற முற்றம் கோடைக்கும் வற்றாத கிணறு இத்தனையும் இன்று அப்படியே இருக்கின்றதோ நாமறியோம்.

புறப்படும் போது கேட்டவர்களுக்கு எஞ்சியிருந்த இரண்டு சோடிக்காப்பும் மகளின்ர ஒரே ஒரு செயினையும் கொடுத்ததாக முன்பு உங்களுக்கு எழுதியது ஞாபகம்தானே. நீங்கள் நகைகள் ஏதும் வாங்கி கொள்ளுமாறு பணம் அனுப்பும் போதெல்லாம் அனுப்பவேண்டாம் என்று எழுதுவதே சில காரணங்களின் நிமித்தம் தான்.

எமக்கு வீட்டுச்செலவுக்கு மாத்திரம் பணம் அனுப்புங்கள். வேறு தேவைகள் இல்லை எல்லாம் உங்களிடம் வந்து சேர்ந்த பின்பு பார்ப்போம். நாங்கள் உங்களிடம் விரைவில் வந்து சேர்வதற்கு வழிசெய்யுங்கள்.

அவுஸ்திரேலியா அரசாங்கம் உங்கள் விடயத்தில் இன்னுமா கண்களைத்திறக்க வில்லை. தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற யேசு பிரானின் யோசனையை உங்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

எனது எழுத்துக்களினால் மனம் தளர்ந்து போய்விடாதீர்கள். மனம்விட்டு எழுதப்படும் வார்த்தைகள் தளர்வுக்காக அல்ல; யதார்த்தத்தை நாமிருவரும் புரிந்து கொள்வதற்காகவும் தான்.மலரவுள்ள சித்திரை புத்தாண்டிலாவது நாம் ஒன்றிணைய கடவுள் கண்திறக்கட்டும். எனதும் பிள்ளைகளினதும் அன்பு முத்தங்கள்.

கடிதம் கண்டதும் புதிய முகவரிக்கு பதில் எழுதுங்கள்.

அன்புடன்,
– உங்கள் மனைவி –

தன் அபிப்பிராயங்களை மாற்றிக் கொல்லாதவன் தேங்கிய நீரைப்போல. அது மனத்தில் புழுக்களை நெளிய வைக்கும்.
– ப்ளேக்.

## இப்படியும் நடக்கிறது.......!!!

'உன்னைத் திருத்து உலகம் திருந்தும்' என்பார்கள். ஒவ்வொருவரும் தம்மைத் தாமே திருத்தமுன்பு, மற்றவர்களை திருத்த முனையக்கூடாது என்பதன் தாற்பரியமே மேற்படி அறிவுரையாகும்.

நம்மவர்கள் மத்தியில் 'ஆட்டத்தைப் பார்த்திடாமல் ஆளை ஆளைப்பார்க்கும்' குணவியல்பே மேலோங்கியுள்ளது. மாற்றுக்கருத்துக்களை மதிக்க வேண்டும், ஏற்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை; எனினும் மாற்றுக்கருத்துக்கும் இடமுண்டு எனக்கருதும் பெருந்தன்மைகூட அருகிப்போய்க் கொண்டிருப்பதுதான் வருத்தத்துக்குரியது.

ஒரு நிகழ்ச்சி நடந்தால், அது அனைத்து தரப்பினரையும் திருப்த்திப் படுத்தும் என எதிர்பார்க்கமுடியாது. அனைவரையும் திருப்த்திப்படுத்தும் விதமாக ஒரு அமைப்பு எந்த ஒரு நிகழ்ச்சியையும் தயாரிக்கவும் இயலாது. (குறுகிய கண்ணோட்டத்துடன், பகுத்தறிந்து பார்க்காமல், "அதில் கலந்து கொள்ளாதீர்கள், அதற்கு போகாதீர்கள், ஏன் இதிலெல்லாம் கலந்து கொள்கிறீர்கள் ?" என்றெல்லாம் பரதேசிகளைப் போன்று பிதற்றிக் கொண்டிருப்பதனால் எந்த ஆதாயமும் கிடைக்கப் போவதில்லை.

இப்படிப்பட்ட பேர்வழிகள் எங்கும் இருக்கிறார்கள். அவர்களின் தொழிலும் இதுதான். சிந்தனை வரட்சியினால் வக்கரித்துப் போயுள்ளவர்கள் எப்படித்தான் பிதற்றினாலும், நடக்க வேண்டியவை நடந்து தானே தீரும்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

எழுத்தாளர்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை மற்றும் ஆக்கங்கள் முதலியவற்றை "அவுஸ்திரேலிய முரசு" எதிர்பார்க்கின்றது.
அனுப்பவேண்டிய முகவரி:–
"AUSTRALIYA MURASU"
P.O.BOX 486, MOORABIN
VICTORIA, AUSTRALIA

www.tamilarangam.net



# சிட்னியில் நடந்த '' உலக'' மாநாடு: ஒரு பார்வை

நல்லதம்பி என்று பெயர் வைத்துவிட்டால் ஒருவன் நல்லவனாகி விடுவதில்லை. வைரத்துக்கும் வைரமுத்துக்கும் சம்பந்தமே இல்லாமல் போகலாம். சிட்னியில் நடத்தப்பட்ட ''உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடும்'' இந்த ரகத்தைச் சேர்ந்ததே.

நல்ல விஷயமென்று தாம் நினைத்த ஒன்றுக்காகத் தமது சொந்த நேரத்தையும், சக்தியையும் விரயம் செய்து கஷ்டப்பட்டவர்கள் அதற்காகப் பாராட்டப்படவேண்டியவர்களே. ஆனால் இதற்கு மேல் பாராட்டக் காரணங்களை மாநாட்டில் சல்லடை போட்டுத் தான் தேட வேண்டியிருந்தது.

கடைசியில் தேறினது, மூன்று நான்கு கலை நிகழ்ச்சிகளே. இது மலையைத் தோண்டி எலியைப் பிடித்த கதைக்குச் சமன். (கலை நிகழ்ச்சிகள் தான் இங்கே மாதம் தோறும் நடக்கின்றனவே! மாநாடு வேறு! வேண்டுமா? அதிலும் சில நிகழ்ச்சிகள் சகிக்க முடியாதன.)

இந்த மாநாட்டுக்குக் கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் தன்மையால், இதற்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கும் வேறுபாடு தெரியாமல் மயங்கியவர்களும் உளர்.

மாநாடென்றால் புதிய கருத்துக்கள் கூறப்படும், சிந்தனையை தூண்டும் விஷயங்களெல்லாம் அலசி ஆராயப்படும் என்று பலரும் எதிர்பார்ப்பார்கள். இங்கே அப்படி எதுவும் கிடையாது. வாசிக்கப்பட்ட கட்டுரைகளில் மிகச் சிலவே வாசிக்கும் தகுதியையாவது பெற்றிருந்தன. ஏனையவை சிறு பிள்ளை விளையாட்டாகவோ கேலிக்கூத்தாகவோ தான் அமைந்தன.

கட்டுரை படிக்கும் அறிஞரை அவரது கட்டுரை முடிந்ததும் காண முடியாது. மற்றவர்களின் கட்டுரைகளை நின்று கேட்க மாட்டார். இது இன்னொருவரின் கட்டுரையை கேட்கும் ஆர்வமின்மையாலா அல்லது தரமற்றதைக் கேட்பது வீண் மினக்கேடென்று கருதிக் கொண்டதினாலா என்பது தெரியவில்லை.

உள்ளே மாநாடு நடக்க, அதே வேளை வெளியே சில அறிஞர்கள் ''புத்தகக் கடை திறந்து வியாபாரம் நடத்த சனக்கூட்டம் அங்குமிங்குமாக 'கொரிடோறில் உலாவியும் அளவளாவித் திரிய, அசல் கோயில் திருவிழா தான், கடலைக் கொட்டை விற்காத குறை. பகல் நிகழ்ச்சிகள் இப்படிப் ''புஷ்'' வாணமாகிப் போயின என்றால், இரவு நிகழ்ச்சிகள் நடிகர் சிவகுமாரைச் சுற்றிச் சுழன்றன. முதல் நாள் இரவு மண்டபம் நிரம்பிய சனக்கூட்டம் நடிகர் சிவகுமார் ஒரு மணித்தியாலம் லேற்றாக வந்து விளக்கேற்றி வைக்கும் வரை, பொறுமையிழந்து திட்டித் திட்டிக் காத்திருந்தது.இதற்குப் பிரதியுபகாரமாகப் பிறகு சிவகுமார் பல விஷயங்களை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார். உதாரணமாக, நடிகைகளில் எந்த நடிகை பாரம் கூட,தண்ணீருக்குள் வைத்து நடிகையைத் தூக்குவது எப்படி, தனக்கு மரமேறத் தெரியுமா போன்றவை. பாவம் இதற்குச் சிவகுமாரைக் குறை கூற முடியாது. முதல்நாள் சிவாஜியைப் போல் வசனம் பேசிக்காட்டியபோது சனம் பேயறைந்தது போல் இருந்தால், அவர்தான் என்ன செய்வார். சினிமா நடிகரைக் காட்டிக்கூட்டம் சேர்ப்பதால் தமிழ்ப் பண்பாட்டை அரை அங்குலம் வளர்க்கலாம் என்று வாதாடும் அவுஸ்திரேலிய பெரியவர்களுக்கு இது சமர்ப்பணம். பிள்ளைகளின் கலை நிகழ்ச்சியொன்று நடந்து முடிந்ததும் தலைமை வகித்த அன்பர் சொன்னார், இந்த நிகழ்ச்சி நல்ல நிகழ்ச்சியோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் இங்கே பார்த்துக் கொண்டிருந்த நடிகர் சிவகுமார் சிரித்ததைக் கண்டேன். ஆனபடியால் இது நிச்சயமாக நல்ல நிகழ்ச்சிதான்.(குறிப்பு: தலைவர்

www.tamilarangam.net



நிகழ்ச்சியைக் பார்க்காமல் சிவகுமாரின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தாரோ?)

அடுத்த நாள் என்ன நிகழ்ச்சிகள், எங்கே நடக்கின்றன என்பதை முதல் நாள் அறிந்து கொள்வதே பகீரதப் பிரயத்தனமாயிருந்தது. இதனால் வெவ்வேறு மண்டபங்களுக்கு அலைந்து திரிந்து விட்டு நிகழ்ச்சிக்குப் பிந்தி வந்தோர் அநேகர்.

இந்த மாநாட்டில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு நல்ல அம்சம் புத்தக கண்காட்சியாகும். இதனை சிட்னித் தமிழ்த் தகவல் நிலையம் நடாத்தியது.

இந்த மாநாட்டில் பங்கு பற்றுபோவதாகப் பெரிய பட்டியல் போட்டு விளம்பரப் படுத்தப்பட்டிருந்த வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களில் வராதவர்கள் போக, வந்தவர்களில் சிலரை மாநாட்டுப்பக்கமே காணமுடியவில்லை. மாநாடுகளின் பயன்களும் பலவிதம் போலும்.

ஒரு அறிஞர் வாயிலில் நின்று கொண்டு வருவோர் போவோருக்கு தன்னைப்பற்றிப் புழுகும் ஒரு புத்தகத்தை ''அன்பளிப்பாகக்'' கொடுத்து, அதற்குப் பணமும் பெற்றுக்கொண்டு இருந்தார்.

ஈழத்தில் தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில் உணவும், உறைவிடமும் இல்லாமல் அல்லலுற்று அழுது கொண்டிருக்கும் இவ் வேளையில்,இங்கே பண்பாட்டின் பெயரைச் சொல்லி இப்படியெல்லாம் நாங்கள் திருவிழா நடாத்துவது சரியா? ஒரு ''சீரியஸ்'' ஆன, கனதியான ஒரு இலக்கை நோக்கிய விஷயமாக இந்த மாநாட்டை நடாத்தியிருத்தல் ஆகாதா? மாநாடு என்பது வேறு, கலகலப்பு-கேளிக்கை-கல்யாணவீடு-திருவிழா வேறு என்பதை எப்பொழுதுதான் நாங்கள் உணர்ந்து கொள்ளப்போகிறோம்?

கலை, இலக்கியம்,பண்பாடு பற்றிய அறிவும் அனுபவமும் பெற்றவர்களும்,''விஷயம்'' தெரிந்தவர்களும் அவுஸ்திரேலியாவில் பல இடங்களிலும் இருக்கிறார்கள். இவர்களுடைய உதவியையும், ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் பெற முயற்சிக்காதமை அல்லது பெறமுடியாமற் போனமை,இம் மாநாடு எதையும் சாதிக்காமல் போனதற்கு ஒரு முக்கிய காரணம்.(குறுகிய அரசியலே நம் பண்பாடு போலும்)

மொத்தத்தில், மாநாட்டு அறிவித்தலை ஆங்கிலத்தில் படிப்பவர்களுக்கு

''The changing face of Tamil culture in Australia''

என்பதைக் கருப் பொருளாகவும் தமிழில் படிப்பவர்களுக்கு ''தேமதுரத் தமிழும் தென்துருவத் தமிழரும்'' என்ற வேறொன்றை கருப் பொருளாகவும் கொண்ட இந்த மாநாடு, ஒரு மாநாடு என்ற முறையில் தோல்வியிலும் ஒரு திரு விழா என்ற முறையில் வெற்றியிலும் முடிந்தது.

---- சிட்னிப் பித்தன் -----

நூலகம் தொடர்ச்சி....

## குன்றின்குரல்

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு மலையகமும் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது. எனினும் தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்படும்போது முழுமையாக மலையக இலக்கியம் ஆய்வு செய்யப்படாமல், மலையக மக்கள், கறிவேப்பிலைகளாக பாவிக்கப்படல் போன்று மலையக இலக்கியத்தையும் கறிவேப்பிலையாக காட்டி சுவைசேர்க்கும் பண்பே ஈழத்து இலக்கிய உலகில் நிகழ்ந்துள்ளது. அப்படிப்பட்ட காலப்பகுதியில், 'குன்றின் குரல்' மலையகத்தை பிரதிபலிகின்றது. பதினொரு ஆண்டுகளாக வெளியாகும் 'குன்றின் குரல்' மலையக மக்களின் ஆத்மாவாக, அம்மக்களின் வாழ்வை சித்திரிக்கும் படைப்புக்களை தாங்கி வருகின்றது. ''குன்றின்குரல்'', புஸ்பதான மாவத்தை, கண்டி, இலங்கை.

www.tamilarangam.net



# சொன்னார்கள்!

*

"ஜயலலிதாவின் சொந்த வாழ்க்கை பற்றி எனக்கு நிறைய தெரியும். அவற்றை சுவரொட்டி மூலம் பகிரங்கப்படுத்தினால் பொதுமக்கள் வெட்கத்தினால் வீட்டுக்குள்ளேயே முடங்கி விடுவார்கள்"

– சுப்பிரமணியசாமி –

*

"சுப்பிரமணியசாமி காங்கிரஸின் கையாள், இவரைப்போல் நூறு சுப்பிரமணிய சாமிகளை சமாளிப்பார் ஜெயலலிதா"

– ஜனதா தள தலைவர் ராமகிருஷ்ண ஹெக்டே –

*

"இந்தியா மீது எமக்கு முன்பு சந்தேகம் இருந்தது உண்மைதான்; ஆனால் இன்று அந்த யுகம் மாறிவிட்டது

– ஜனாதிபதி பிரேமதாஸ –

*

"சென்னையில் நடந்த பாட்டாளி மக்கள் கட்சியின் தமிழர் வாழ்வுரிமை மகாநாட்டில் தேசப் பிரிவினைக்கு ஆதரவாகவோ புலிகளுக்கு ஆதரவாகவோ கோஷம் எழுப்பப்படும் என்று முன்னரே தெரிந்திருந்தால் அந்த மகா நாட்டில் கலந்து கொண்டிருக்க மாட்டேன்"

– முன்னாள் இந்தியப்பிரதமர் வி.பி.சிங்க் –

*

"அரசாங்கத்தின் கூட்டுப்பொறுப்புக்கோ, ஒப்பந்தத்துக்கோ நான் கட்டுப்பட்டவன் அல்ல; அரசாங்க கட்சியில் அங்கத்துவனும் அல்ல. எனது கருத்துக்களை சுதந்திரமாக சொல்வேன், மற்றவர்களின் தாளத்துக்கு நான் ஏன் ஆடவேண்டும்"

– அமைச்சர் தொண்டமான் –

*

"தமிழ் தீவிரவாதம் ஈழத்தின் தமிழ் தேசியவாதமாக மாறிவிட்டது. அதனைத் தமிழ் தேசியத்தின் ஈழமயப்படுத்தப்பட்ட வடிவம் என்றும் கருதலாம்"

– பேராசிரியர் கா.சிவத்தம்பி –

*

"புதிய நாஜிகளோ, பழைய நாஜிகளோ எந்த நாஜியும் வேண்டாம். ஜனநாயகமே எமக்கு வேண்டும். நாம் முதலில் மனிதர்கள் என்பதை உணர்வோம்"

– ஜேர்மன் தொழில் அமைச்சர் நோபேர்ட் ப்லும் –

*

"தனித்தமிழ் என்பது: கோர்ட், நீதி மன்றம் ஆகலாம்! ஜட்ஜ் நடுவராகலாம்; ஜட்ஜ்மெண்ட் தீர்ப்பு ஆகலாம்! அதற்காக தீர்ப்பு எழுதப்பயன்படும் பேனா, மூடியிட்ட எழுதுகோல்", என ஆகத்தேவையில்லை"

– கலைஞர்கருணா நிதி –

## நடிகர் சிவகுமார்... தெரிந்ததும்... தெரியாததும்....




நடிகர் சிவகுமார் பெரும்பாலானவர்களுக்கு சினிமா நடிகராகவே அறிமுகமாகியுள்ளார். அத்துடன் அவர் ஒரு சிறந்த ஓவியர் என்பதும் அறியப்பட்டதே. எனினும், அவர் மனித நேயம் மிக்க எழுத்தாளர் என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை. தமிழ் திரையுலகின் இருண்ட பக்கங்களையும், அந்த கனவுத் தொழிற்சாலையில் அவர் பெற்ற அனுபவங்களையும் எளிமையான முறையில் "இது ராஜபாட்டை அல்ல..." என்ற தலைப்பில் ஜுனியர் விகடனில் தொடர்ந்து எழுதினார். பின்னர் இத்தொடர் தனி நூலாகவும் வெளியாகியது. மேலும் சில பத்திரிகைகளிலும் சிவகுமார் எழுதியிருக்கிறார்.

வறுமையில் வாடிய பல ஏழை மாணவர்களுக்கு உதவும் பொருட்டு 'சிவகுமார் நம்பிக்கை நிதியம்' என்ற அமைப்பை உருவாக்கி பலருக்கு ஆதரவு வழங்குகிறார்.

பாதிக்கப்பட்ட திரை உலகக் கலைஞர்களுக்கு வலது கை கொடுப்பதை இடது கை அறியா வண்ணம் உதவுகின்றார்.

ஒரு நடிகரின் விளம்பரப்படுத்தப்படாத பக்கங்கள் இவை.

– தமிழ்ச் செல்வன் –

www.tamilarangam.net


# நூலகம்

### எஸ்.பொ. எழுதிய..
### நனவிடை தோய்தல்

கடந்த காலங்களை, நிகழ்காலத்தில் நினைத்துப் பார்த்தல் சுகானுபவமானது அவ்விதம் நினைப்பவற்றுக்கு இலக்கிய நயம் சேர்த்து வாசகர்களும் நுகரவைத்தல் பயன்மிக்கது. அவுஸ்திரேலியாவில் வெளியாகும் 'மரபு' இதழில் எஸ்.பொ. தொடர்ந்து எழுதிய 'நனவிடை தோய்தல்' தற்போது தனி நூலாக தொகுக்கப்பட்டு வெளியாகியுள்ளது.

மேற்குறிப்பிட்ட பயனை இந்த நூல் தந்துள்ளது எனலாம். இன்று படிப்படியாக மறைந்து கொண்டிருக்கும் யாழ்.குடாநாட்டின் ஆத்மாவை மீண்டும் தரிசிக்க இந்நூல் வாய்ப்பளித்துள்ளது.

எஸ்.பொ. தனது வாழ்க்கைச் சித்திரம் இழையோட தளக்கேயுரித்தான நடையில் அன்றைய யாழ். மண்ணின் மணத்தை கமழச் செய்துள்ளார்.

அவரது சொந்தங்கள், நட்புகள், நினைவில் நிற்க்கும் காட்சிகள் யாவற்றுக்கும் உரைநடையால் உயிரூட்டியுள்ளார். சில பக்கங்கள் அவரது அந்தரங்கத்தை அம்பலப்படுத்தியிருப்பினும் கூட அதிலும் நயம் தொனிக்கின்றது.

ஈழத்து இலக்கிய வலர்ச்சியில் முற்றிலும் வித்தியாசமான படைப்பு இலக்கியம் இந்த நூஉல். பிரதிகளுக்கு:-

S.PONNUTHURAI
7/608 BLAXLAND ROAD
EASTWOOD, N.S.W. 2122
AUSTRALIA

### ஈழகேசரி

"'பத்தோடு பதினொன்றாக அல்ல, சத்தோடு தனித்துவமான தமிழ் உலகின் புதிய ஏடு' என்ற மகுடத்தில், லண்டனிலிருந்து இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை வெளியாகிறது ஈழகேசரி.

இலங்கையில், தினகரன், ஈழநாடு லண்டனில் அண்மைக்காலத்தில் 'தமிழன்' என்ற பத்திரிகையை வெளியிட்டவருமான ஈ.கே.ராஜகோபால் புதிதாக தொடங்கியுள்ள பத்திரிகை ஈழகேசரி. வழக்கமான அம்சங்களுடன், ஜனரஞ்சக குடும்ப இதழாக வெளியாகியுள்ள 'ஈழகேசரி'யின் தொடர்பு முகவரி.

"EEZAKESARI"
2nd Floor, 118 Tooting High Street, London. SW 17.

## ஞாபகங்கள் மரணிப்பதில்லை

— மேத்தாதாஸன்

*சென்னையில் வாகனவிபத்தில் மறைந்த கவிஞர் மேத்தாதாஸன் நினைவாக, அவரது கவிதை இங்கு பிரசுரமாகிறது.*

ஞாபகமிருக்கிறதா
என்னைப்பற்றிய
நினைவிருக்கிறதா ?

மஞ்சள் மேகங்களை
ரசிக்காது
மரணித்துப்போன அந்த
அடிவானத்தைய கனவுகளை
அசைபோடும்
அடியவனை ஞாபகமிருக்கிறதா ?

பூக்களையும் — வண்டுகள்
ரீங்காரமிட்டு பாடும்
வசந்த கீத்ததையும்
விலக்கிவிட்டு

மொத்த முகவரியோடு
நீ
குத்தியனுப்பிய கடிதங்களைப்
புரட்டிக் கொண்டிருக்கும்
பித்தனை நினைவிருக்கிறதா ?

ப்ரியமான நன்பர்களுடன்
பேசுவதை எல்லாம்
புறக்கணித்துவிட்டு

என்றோ உனது
கூந்தல் வானிலிருந்து
உதிர்ந்து போன மல்லிகையை
பிரமுகராக்கிப் பூஜிக்கின்ற
இந்த பக்தனைப்பற்றி
நினைவிற்கு வருகின்றதா ?

உனது
செல்லச் சிணுங்கல்களை
தேசிய கீதமாக
தேர்தெடுத்துக் கொண்டதும்

உதிர்ந்த புன்னகைகளை
ஒன்று திரட்டி
முத்து மணிமாடம்
முழுக்கக் கட்டியிருப்பதும்

..... (16)

www.tamilarangam.net



# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

உண்மையைத் தேடும் துணிச்சலான பத்திரிகை.

இலங்கையில் இருந்து வெளியாகும் ''சரி நிகர்'' பத்திரிகையைத் தங்கள் வாசகர்களுக்கும் அறிமுகம் செய்யச் சந்தர்ப்பம் கேட்டு இதை எழுதுகிறேன்

''சரி நிகர்'' என்ற தமிழ்ப் பத்திரிகையும், ''யுக்திய'' என்ற சிங்கள பத்திரிகையும் கொழும்பில் இருந்து ''இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்'' (MIRAJE)வெளியிடுகிறது. ''யுக்திய'' தமிழர்களின் சுயநிர்ணய உரிமை உட்பட எல்லா உரிமைகளையும் வழங்க வேண்டுமெனச் சிங்கள மக்கள் மத்தியில் கடுமையாகப் பிரச்சாரம் செய்யும் பத்திரிகை. இது 50 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சரி நிகர் பத்திரிகையின் செப்டெம்பர் ஒக்டோபர் இதழ் வழமை போல் சிறந்த முறையில் வந்துள்ளது. ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான சிந்தனை யைத் தூண்டும் விஷயங்கள்....வேறெங்கும் வாசித்தறிய முடியாத தகவல்கள்.

தமிழர்களுக்காக ஒன்றையும் உருப்படியாகச் செய்ய முடியாத பாராளு மன்றத் தெரிவுக் குழுவின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளது.குழந்தைகள் பெண்கள், வயது முதிர்ந்தோர் என்ற பேதமின்றி பொலநறுவையில் கொன்று குவிக்கப் பட்ட 160க்கு மேற்பட்ட முஸ்லீம்களின் உண்மைக் கதை.... வடக்கு கிழக்கு இணைப்பையும், சமஷ்டியையும் ஒவ்வொரு சிங்கள மக்களும் எதிர்க்கிறார்கள் என்று நியாயம் பேசியுள்ள அமைச்சர் மன்சூருக்கு அடி.... யாழ்ப்பாணத்தில் இலக்கியம் படைத்து விட்டு அதனை ஒளிப்பதற்க்கு இடம் தேடும் படைப்பாளிகள் சந்தர்ப்பவாதிகளாக மாறியுள்ள படைப்பாளிகள்.....வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய ஆய்வு.... விடுதலைப் போராட்டத் தின் வரலாற்றை ஆராயும் தொடர்... மலையக காணிப் பகிர்வில் இன வாதம்... யாழ்பாணவாசி நடுக்கத்துடன் எழுதியனுப்பிய ஒரு கடிதம் ...றோவிடம் ஆயுதம் வாங்கியதை அம்பலப்படுத்திய திலகர் அறிக்கை.....

எந்தப் பக்கமும் சரிந்து விழுந்து விடாமல், நிதானமாகவும், நேர்மையாக வும் துணிவாகவும் எழுதும் ஒரு தமிழ் பத்திரிகை இன்றும் இலங்கையில் வருகிறதே பெரிய விஷயம் சில வேளை நம்புவதே கஷ்டம்.தமிழர்களுக்கு நியாயம் கேட்டும், மனித சமுதாயத்துக்கு நியாயம் கேட்டும் எழுதும் பத்திரிகை. எதைப் படிக்காவிட்டாலும் '' சரிநிகரை'' படியுங்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

--குமார்–

## அறிஞர் வாக்குகள்

உங்களைக் காட்டிலும் கெட்டிக்காரர்கள் உங்களைச் சுற்றி இருக்க வேண்டும்; அல்லது உங்களைக் காட்டிலும் கெட்டிக்காரர்களைச் சுற்றி நீங்கள் இருக்க வேண்டும்! அதுதான் வெற்றிக்கு வழி.

– பாங்க்கில்

அடுத்தவனுடைய ரகசியம் என்பது அவனுடைய பணம் மாதிரி! இன்னொருவரின் பணத்தை எடுத்துச் செலவழிக்க உங்களுக்கு எவ்வாறு உரிமை இல்லையோ! அதேபோலத்தான் அவருடைய ரகசியத்தை வெளியிடுவதும்!

– இ. டபிள்யு. ஹோ

## ஞாபக

தொடர்ச்சி...

அவஸ்தைகளின் தாகத்திற்கு
தேகத்தையே

தானமாகத் தந்திருப்பதும்...

நினைவுருக்கிறதா உனக்கு
நிச்சயம் இந்த
எழுதப்படாத சரித்திரங்கள்
ஞாபகத்தில் இருக்காது

ஏனெனில்
நீ
ஆயிரமாயிரம் முகங்களுக்குள்
உன்னையே
தொலைத்துக் கொண்டாய்

நானோ
இப்போதுதான்
தேடும் படலத்தையே
தொடங்கி இருக்கிறேன்

www.tamilarangam.net


## ஆசிரியருக்கு கடிதங்கள்......கடிதங்கள்

**வாசகர் கருத்து**

இந்தியாவும் ஈழத் தமிழரும்:

நான் பெரும் படிப்புப் படிச்சவனல்ல.குழறுபடி இல்லாமல், உள்ள அறிவைக் கொண்டு யோசிச்சுப்பார்த்தேன்.

இந்தியாக்காரன் கெட்டவன், இலங்கைத் தமிழனைக் கைவிட்டான், ராஜீவ் காந்தி துரோகி என்று பலர் கதைக்கிறார்கள்.இப்படிக் கதைக்கும் யாழ்ப்பாணத் தமிழர் தான் முன்பு வடக்கத்தையான் என்றும் கதைத்தவர்கள். காப்பாற்ற வரேல்லையாம் அவனென்ன அண்ணனோ? தம்பியோ? மாமன் மச்சானோ? அவனுக்கு ஒரு கஷ்டம் வந்திருந்தால் இவை என்ன, படை கொண்டு காப்பாற்றப் போயிருப்பினமோ? இவைக்கு அவன் வந்து உயிரைக் குடுக்க வேணுமோ? தன் அயலவையைப் பகைக்க வேணுமோ? இன்றைக்குச் சென்னையில் ஒரு அரசியலும் அறியாத சாதாரணத் தமிழன் கூட சிலோன் காரன் என்றவுடன் காறித்துப்ப என்ன காரணம்? மூன்று வருஷத்துக்கு முன் அவன் இப்படி செய்யவில்லையே!

இப்பவெல்லாம் இலங்கை அரசாங்கம் இவ்வளவாய்த் துள்ளிக்குதிக்கிறத்துக்கும், சனத்தை அழிக்கிறதுக்கும், பிரச்சனையைத் தீர்க்கமாட்டன் என்று திமிர் பிடித்து நிக்கிறதுக்கும் காரணம் இந்தியா வரான் என்ற துணிச்சல் தானே. இங்கே கொஞ்சம் சூடேற முன்னம் அங்கே மீசையை முறுக்கின இந்தியா இப்பொழுது ஏன் இப்படிக் கையை விட்டுவிட்டது என்று நாங்கள் கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

அரசியலை அரசியலாய்ப் பார்க்க வேண்டும். நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையில் நடக்கிறது அண்ணன் தம்பி உறவு முறை அல்ல. அமெரிக்கன் நிக்கரகுவாவிலே உதவினதும், ரஷ்யாக்காரன் வியட்னாமிலே உதவினதும் அங்கே உள்ள சனங்களிலே உருகியல்ல. ஒரு நாடும் அப்படி உருகி உதவி செய்வதும் இல்லை.எல்லாவற்றுக்கும் ஒரு அரசியல் அடிப்படை உண்டு.

இந்தியாக்காரன் எங்களுக்கு உதவத்தான் வந்தான். அதே சமயம் தனக்கும் சில லாபங்களை ஈட்டப் பார்த்தான். இது மனநீதிக்குப் பிழையென்று வாதாடலாம். ஆனாலும் என்ன? இது தான் உலக நியதி. அரசியல் யதார்த்தம். அவனுக்கு வார லாபத்தைப் பற்றி மனம் புழுங்காமல் அவனைத் தமிழர் வடிவாகப் பாவித்திருக்க வேணும். அதுக்காக அடிமைப் பட்டுப் போகச் சொல்லவில்லை. தமிழனை அடிமைப்படுத்தவென்று அவன் வரவும் இல்லை. அவனுக்குத் தேவை பிராந்தியத்தில் அரசியல் வலு. அவ்வளவே. அவனுக்குப் பாடம் படிப்பிக்க நாங்கள் வெளிக்கிட்டுச் சிங்களவனோடு சேர்ந்தோம். அவனை எதிரியென்றோம்.சிங்கள ராணுவத்தோடு கைகோர்த்து நட்புக் கொண்டாடினோம் அவனுக்குச் சகுனப் பிழை வந்தது. எங்களுக்கு மூக்கே போய் விட்டது.

இந்தியா ஒரு பெரிய பூதம் மாதிரி. அதுக்குக் கல்லெறிந்து பலனில்லை. அரசியல் விவேகம் – சாணக்கியம் – தீர்க்கதரிசனம் என்ற மந்திரக் கோலே வகை சொல்லும்.

இந்தப் பூதம் வழி விட்டு விலகினதால் தானே இப்பொழுது தென்னிலங்கை வெறியர்கள் தட்டிக் கேட்க ஆளில்லையென்று குதியாட்டம் போடுகிறார்கள். தமிழர்களைக் கொல்கிறார்கள். பட்டினி போட்டு வதைக்கிறார்கள்.

இந்தியாவின் பலத்தைப் பாவித்து ஒரு சமாதானத் தீர்வுக்கு வரத் தவறினோம். உட்பூசல், அதிகாரப் போட்டி,அகங்காரம் போன்றவையே முன்நின்றன தூரப் பார்க்கவில்லை.

— 1 —

அழிகிறோம்.

––––– கதிர்காமத்தடியான்

www.tamilarangam.net



*நரியார் நல்ல உலக அனுபவம் மிக்கவர். நல்ல விஷயங்களாகட்டும், கிசு கிசுக்களாகட்டும், நல்ல நகைச்சுவையோடும்... நக்கலோடும் எடுத்துச் சொல்வார். இம்முறை தொடக்கம் அவருக்குச் சொந்தமாக இந்தப் பக்கத்தை ஒதுக்கியுள்ளோம். நரியாரின் விஷயங்களைப் படித்துச் சிரிப்பதும், திட்டித் தீர்ப்பதும் வாசகர்களின் சுதந்திரம். நரியாருக்கு வாசகர்கள் விரும்பினால் உங்கள் அனுபவங்களையும் தெரியப்படுத்தலாம்.*

*– ஆ.ர் -*

# நரியாரே... நரியாரே...

*மாமனா ? மச்சானா ?....*
*ஹி..ஹி..*



இரத்த உரித்துக் கொண்டவர்களை நாம் சொந்தம் என்று சொல்வோம். நம் ஊரில் அது வாயினால் சொல்லித் தெரியவேண்டியதில்லை. யாருக்கு யார் என்ன முறையில் சொந்தம் என்பது வெட்ட வெளிச்சம்.

வெளிநாட்டு கதையோ வேறு விதம். பல தமிழர்களைக் கொண்ட நாடு அது. வசதியுடன், விலையுயர்ந்த காருடன் பவனி வரும் " அவர்களை எமக்குத் தூரத்துச் சொந்தம்" என்று வாஞ்சையுடன் ஒரு தம்பதிகள் தங்களது நெருங்கியவர்களுக்கு கூறி விட்டார்கள்.

கதை கிசு கிசுவாகியது.

வசதி படைத்தவர்களுக்கு கோபம். தம்பதிகளோ மத்தியதர வர்க்கம், வெளிநாட்டில் வசதி படைத்தவர்கள் சும்மா இருப்பார்களா ?

"அவர்களாவது நமக்குச் சொந்தமாவது ? அவர்களது வீட்டின் நிறமே எமக்குத் தெரியாது " எகிறிக் குதித்தார்கள்.

தம்பதிகளுக்கோ கோபம். ஆத்திரம். கணவன் மௌனமாகிவிட்டான். மனைவி விடுவாளா ?

"நாங்கள் ஊரில் பெரிய வீட்டில் கள். எங்கடை வீட்டைத் தாண்டி தோட்டத்துக்கு போகேக்க எங்கட வீட்டின் நிறம் தெரியல்லையாமோ ? தோட்டத்தில் நின்று பாத்தி கட்டினவைக்கு.. வெளிநாட்டுக்கு வந்து பணக்காரராகி விட்டவுடன் நாங்கள் சொந்தமில்லையாமோ"

நடுவில் நின்று வேடிக்கை பார்ப்பவர்களுக்கு வலு கொண்டாட்டம்.

இங்கேயும்...அங்கேயும் தூண்டிவிட...

"அவையளைப் போல படிக்காமல்...ஊரில Influenceலை. வேலை பார்க்கேல்லை நாங்கள். தோட்டத்தில நிண்டாலும்...படிச்சதால தான்...வெளிநாட்டில வசதியாய் இருக்கிறம்."

சொந்தத்தை நிரூபிக்கப் போய்...பரம்பரை பெருமைகள் நாறின....

இவர்களது சண்டையில் மற்றவர்கள் ஒரு விஷயத்தை நன்கு புரிந்து கொண்டார்கள்.

வசதி படைத்தவர்கள் வசதி படைத்தவர்களை...., மத்தியதர வர்க்கத்தினர் மத்தியதர வர்க்கத்தினரை.... தான் சொந்தம் என்று சொல்லலாம். (நல்ல காலம் ஏழைகள் வெளிநாட்டில் இல்லை).

என்னை யாரும் இனி உங்களுக்கு யாரும் சொந்தமோ என்று கேட்டால்.....

நானோ.... இனியோ..கேக்கிறவைக்கு முன்னால செத்தாலும் நிற்பனோ!...

www.tamilarangam.net



## அமரர். நகேந்திரம் தட்சணகுமார் (மோகன்)

# அஞ்சலி

அவுஸ்திரேலிய தமிழர் ஒன்றியத்தின் உறுப்பினராகவும், செயற்குழு அங்கத்தவராகவும் இயங்கிய நா. தட்சணகுமார் (மோகன்) கடந்த 5.12.92 இல் அகால மரணமடைந்தார். அன்னாரின் மறைவினால் பெரும் துயரமடைந்திருக்கும் திருமதி. ரஞ்சிதம் தட்சணகுமாருக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் ஒன்றியம் தனது அனுதாபங்களை தெரிவிக்கின்றது.

தட்சணகுமார் ஒன்றியத்தின் பணிகளில் அக்கறையுடன் ஈடுபட்டு செயல்பட்டதுடன் வேறும் சில சமூகப்பணிகளிலும் தன்னை பிணைத்திருந்தார். அவரது மறைவு தாங்க முடியாத சோகம். தற்போது எம்மிடம் எஞ்சியிருப்பது அவரைப்பற்றிய நினைவுகளே.

## அமரர். சபாரத்தினம்

யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் நிருவாக ஆசிரியருமான திரு. ந.சபாரத்தினம் அண்மையில் காலமானார். அன்னாரின் மறைவு, தமிழ் கல்வி உலகிலும், தமிழ் பத்திரிகை உலகிலும் நினைவு கூரத்தக்கது.

நெருக்கடிமிக்க காலகட்டத்தில் துணிகரமான கருத்துக்களையும், அதன் மூலம் புதிய சிந்தனைகளையும் தனது ஆசிரியத் தலையங்கங்கள் மூலம் உருவாக்கியவர் சபாரத்தினம்.

வெறுமனே செய்திகளை மாத்திரம் பார்த்துவிட்டு (படித்துவிட்டு) பத்திரிகையை மூடும் பழக்கம் மிக்கவர்களை, ஆசிரியத் தலையங்கத்திற்காகவே பத்திரிகை படிக்கும் வழக்கத்திற்கு மாற்றியவர் சபாரத்தினம்.

அவரது கருத்தோவியங்கள் காலம் பூராவும் நிலைத்து நிற்கும். அவுஸ்திரேலிய முரசு தனது அஞ்சலியை தெரிவிக்கின்றது.

---

## கலை விமர்சனம்

யார் நிகழ்சி நடாத்தினாலும் ஏதாவது ஒரு குறை இருக்கும். ஆனால் உங்கள் முத்தமிழ் விழாவில் மட்டும் ஒரு குறையும் இல்லை. இது தானோ உங்கள் நடு நிலையான விமர்சனம்! யாரைப் பேய்க்காட்டுகிறீர்கள்.

-- உண்மை விளம்பி --


*(விமர்சனம் எழுதியவர் தனது பெயரையும் கொடுத்திருந்தார். உண்மை விளம்பி அவரை சந்திக்க நேர்ந்தால் அவரிடம் முத்தமிழ் விழாவில் ஏன் ஒரு குறையும் காணவில்லை என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அத்துடன் தான் கண்ட குறைகளை எழுதியிருந்தால், அடுத்த நிகழ்ச்சியை குறையின்றி நடாத்த நமக்கு உதவியாயிருக்கும்) தமது உண்மையான பெயரையும், முகவரியையும் ஆசிரியருக்கு தெரியப் படுத்தாமல் எழுதப்படும் எந்த விடயமும் பிரசுரப் பரிசீலனைக்கு இனி மேல் எடுத்துக்குகொள்ளப் படாது நிராகரிக்கப் படும் என வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.*

– ஆசிரியர்.

www.tamilarangam.net








ரிஷியசிருங்கர்

'எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்' இந்த நாட்டிலே இந்தப் பாடலை இன்றைக்கும் நாம் ரசித்துக் கேட்கலாம். எனினும் ஏமாற்றும் காலத்துக்குத் தான் இலங்கை அரசாங்கம் இன்னமும் முற்றுப்புள்ளி இடவில்லை.

இலங்கையில் இனப்பிரச்சினை கூர்மையடைந்த காலம் முதலே, 'அரசியல் தீர்வுதான்' பரிகாரம் என்று மீண்டும் மீண்டும் வாய்ப்பாட்டையே ஒப்புவிக்கும் அரசு தனது இனவாத செயல்பாட்டையும் நிறுத்தவில்லை.

''கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும்
தக்குமுக்கு திக்குத் தாளம்
எட்டு நாளிலே
தெரிந்து போகும்
தக்குமுக்கு திக்குத் தாளம்'' என்பார்கள்.

இலங்கை அரசின் பொய்யும் புரட்டும் எப்படிப்பட்டது என்பதை தெரிந்து கொள்ள எட்டு நாட்கள் தேவையில்லை. இலங்கை ஜனாதிபதியும், அவரது கட்சியின் அரசியல்வாதிகளும் இனப்பிரச்சினை தொடர்பாக பேசத் தொடங்கியதுமே தெரிந்துவிடும்.

'அரசியல் தீர்வுதான்' இனப்பிரச்சினைக்கு பரிகாரம் என்றால், பாதுகாப்பு செலவீனங்களுக்கு பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்படுவதேன் ?

அயல் நாடுகளில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்வதேன்.

ஏதேனும் அண்டை நாட்டின் அச்சுறுத்தல் இலங்கைக்கு உண்டா ?

இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழினம் தனது சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுப்பதற்கு அருகதை உள்ளவர்கள் என்பதை ஒப்புக் கொள்ளும் ஜனாதிபதி, அரசியல் தீர்வு காணப்படாது போனால் நாடு துண்டாகிவிடும் என்று மேடைகள் தோறும் பிரகடனம் செய்யும் ஜனாதிபதி, ஏன் இன்றுவரையில் அரசியல் தீர்வை காண்பதற்கு காலம் தாழ்த்திவருகிறார்.

இதன் பின்னணி மர்மம் என்ன?
காலில் சொறி சிரங்கு பீடித்த பிச்சைக்காரன், அந்த நோயை குணப்படுத்த விரும்பமாட்டான். குணமாகிவிட்டால் பின்பு பிச்சை எடுக்க முடியாது. தொடர்ந்து பிச்சை எடுத்து, தனது ஏழ்மையை பிரகடணப்படுத்த அவனுக்கு அந்த நோய் தேவை.

அதுபோன்று, இலங்கை எதிர்நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இனப்பிரச்சினைதான் அரசு தூக்கிப்பிடிக்கும் 'பிச்சைப் பாத்திரம்'

இனப்பிரச்சினையை தீர்த்துவிட்டால் தென்னிலங்கை மக்களின் பொருளாதார பிரச்சினைக்கு வழி தேட வேண்டும், சொல்லவேண்டும். எனவே, இது தீரக்கூடாது என்பதில் அரசாங்கம் மிகவும் கவனமாக இருக்கின்றது. சர்வதேச நாடுகளின் பொருளாதார உதவிகளுக்காக 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' முதலான நாடகங்களை மிகக் கச்சிதமாக மேடையேற்றி வருகிறது இலங்கை அரசாங்கம்.

www.tamilarangam.net



இந்த நாடகமும் அண்மையில் திரைவிழுந்து விட்டது. இனி அடுத்த நாடகத்தை எப்படி மேடையேற்றலாம், யார் யாரை அதற்கு நடிகர்களாகப் போடலாம் என்பதில் அரசாங்கம் அக்கறை கொள்ளத்தொடங்கியுள்ளது.

மதகுருமாரையும், ஸ்ரீநிவாஸன், தொண்டமான், ஒஸி அபயகுணசேகரா முதலானோரின் உதவியையும் நாடலாம்.

ஒருபக்கம் சமாதான பேச்சுவார்த்தை, தூதுக்குழு என்று ஒருவர் பின் ஒருவராக அனுப்பி வடக்கில் புலிகளின் பலத்தை கணித்து, அதற்கு தகுந்தாற்போன்று தனது படை பலத்தை பெருக்கி, யுத்தமுஸ்தீபுக்கு தயாராகும் கைங்கரியமே தொடர்கின்றது.

ஒரு யுத்ததில் ஈடுபடும் இரண்டு தரப்புமே எச்சமயமும் தனது இராணுவ இரகசியங்களை வெளியிடாது. இரண்டு தரப்பிலிருந்தும் வெளியேறியவர்களினால், அல்லது வெளியேற்றப்பட்டவர்களால் இரகசியம் வெளியாகலாம் அல்லது 'ஆதாயம்' கருதி பரிமாற்றம் செய்யப்படலாம். இந்த இரண்டு தரப்புகள் எப்படி இயங்கிய போதிலும், மற்றுமொரு மூன்றாவது தரப்பு அனைத்தையும் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கின்றது என்பதை பெரும்பாலோனோர் உணர்வதில்லை.

அந்த மூன்றாவது தரப்பு....
ஆயுதங்களை விற்பனை செய்யும், விநியோகிக்கும் ஏஜண்டுகள். யுத்தத்தை முடிக்க வேண்டும் என்று முதல் இரண்டு தரப்புகளும் தீர்மானித்தாலும் கூட இந்த மூன்றாவது தரப்புக்கு அந்நிலை சாதகமானதல்ல.

பத்தாண்டுகளாக நீடிக்கும் இந்த நெருக்கடியின் தாற்பரியம் இதுதான்.

ஒரு சிறுபான்மை இனத்தின் அடிப்படை உரிமைகளை மதிக்காத, வழங்காத எந்த ஒரு பெரும்பான்மை இனமும் நிம்மதியாக இருக்கப் போவதில்லை என்ற சான்றோரின் கூற்றைத்தான் இலங்கை அரசுக்கு நினைவு படுத்தலாம்.

## எமது தமிழ் நாடகங்கள் ?

ஒரு ஆய்வு...

ஆற்றல் வற்றிப்போகாத கலைஞர்கள் தாம் எங்கு வாழ நேரிட்டாலும் தாம் சார்ந்த கலைத்துறைக்காக தம்மாலியன்றவாறு ஏதேனும் பணிகளை மேற்கொள்வது இயல்பு.

தமிழ் கலைகளில் குறிப்பிடத்தகுந்த வடிவமாக கருதப்படும் நாடகத்துறையில் நம்மவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், விமர்சனங்கள், நடைமுறை சிக்கல்கள் முதலானவை தொடர்பாக விரிவாக ஆராயும் வகையில் 'அவுஸ்திரேலிய தமிழர் ஒன்றியம்' அண்மையில் மெல்பேர்னில் நடத்திய 'நாடக கருத்தரங்கு' அமைந்திருந்தது.

கலைஞர் மாவை நித்தியானந்தன் 'நாடகம்' என்ற தலைப்பில் அதன் தோற்றம், வளர்ச்சி குறித்து விரிவாகவும், தமிழ் நாடக தேக்க நிலைமை பற்றியும் எடுத்துரைத்தார்.

தத்துவார்த்த பூர்வமாக அமைந்த அவரது கருத்துரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் திருவாளர்கள் சிவசம்பு, ஸ்ரீஸ்கந்தராஜா, கண்ணன், பாஸ்கரதாஸ், முருகபூபதி, ஸ்ரீபாலன், திருமதிகள் சுமதி சத்தியமூர்த்தி, அருண் விஜயராணி ஆகியோரும் பங்கு பற்றினர்.

மேற்படி கருத்தரங்கு தொடர் வரிசையில் அடுத்ததாக 'நாட்டியம்' என்ற தலைப்பில் மற்றுமொரு கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

*With Compliments from*

**GALLE FACE CAFE**
754 A, High Street
Thornbury 3071
Phone : (03) 484 7336

# ANJANA SILK IMPORTS

THE EXCLUSIVE INDO-SRI LANKAN BOUTIQUE
for

* INDIAN TEXTILES
  Sarees, Gagara Choli, Churithas, Guruthas
  Batik Shirts & Dresses, Cotume Jewellery etc.
* ASIAN GROCERIES & SPICES
* FROZEN FOODS
* TAMIL, SINGHALA & HINDI VIDEO MOVIE HIRE
* NEWS PAPERS FROM SRI LANKA

**ANJANA SILK IMPORTS**
**4/50 Plenty Road, South Preston**
(Adjoining Dundas St. - Plenty Rd. SAFEWAY Supermarket)
TEL : 4841183

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# SHAN IMPORTS & EXPORTS

DELERS IN LEATHER GARMENTS AND ASIAN FOODS

**447 SOUTH ROAD, MOORABBIN, VIC 3189**
**TEL: 5530184 (018) 382231 FAX: 5322054**

## தாய் நாட்டிலும் இந்தியாவிலும் இருந்து தருவிக்கப்பட்ட தரமான உணவுப் பொருட்களை நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ள எம்மை அணுகுங்கள்

இறக்குமதி செய்யப்பட்ட தரமான மளிகைச் சாமான்கள், தாய் நாட்டின் தரமான மிளகாய்த்தூள் – சரக்குத்தூள் – நல்லெண்ணெய் – நெய் – அச்சாறு –ஊறுகாய் – ஊதுபத்தி – பழரசங்கள் மற்றும் கடலை வகைகள்.

*எங்களது வீடியோ கடையில் தரமான*
*தமிழ் – ஹிந்தி – மலையாள – சிங்கள*
*வீடியோ படங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்*

*எம்மிடம் மிகப்பெரிய அளவிலான புதிய ஆடியோ C.D.*
*வெளியீடுகள் கிடைக்கும்*
*FAX சேவையும் உண்டு*

*அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு வீரகேசரி வார வெளியீடு, ஈழநாடு வாரமலர் முதலான பத்திரிகைகளை உடனுக்குடன் வழங்கும் பெருமையும் கொண்டது*

*நாம் நாடுவோர் தயங்காமல் நாட வேண்டிய இடம்*

**SHAN IMPORTS & EXPORTS**